Mai 2016 **TAMILISCH**

LUZERN

# அவசரஉதவி-மடல்

Nothilfekarte

நீங்கள் உங்கள் உறவில் அல்லது குடும்பத்தில் பாதுகாப்பில்லை என உணர்கின்றீர்களா? வன்முறையைச் சந்திக்கின்றீர்களா? நீங்கள் வெருட்டப்படுகின்றீர்களா? **உதவியைப் பெறுவதற்கு நீங்கள் தாமதிக்க வேண்டாம்!**

KANTON LUZERN

Koordination Gewaltprävention und Bedrohungsmanagement | gewaltpraevention.lu.ch

# நிறுத்து வன்றையை!

அவசர வேளை மற்றும் உதவிக்கு

Polizeinotruf

## பொலிஸ் அவசர அழைப்பு ☎ 117

எந்த நேரத்திலும் தொடர்புகொள்ளலாம்

## வன்முறை தண்டனைக்குரியது

சேர்ந்து வாழுபவர்கள் மற்றும் குடும்பத்தில் பாவிக்கும் வன்முறை தண்டனைக்குரியது மற்றும் இது தனிப்பட்ட-விடயமல்ல. இதுகுறித்து பொலிசார் அறிந்தால், அவர்கள் விசாரணை செய்வார்கள். எந்தவொரு பொலிஸ் நிலையத்திலும் எந்த வேளையிலும் ஒரு **குற்றப்பதிவை** மேற்கொள்வதற்கு உங்களுக்கு சந்தர்ப்பமுள்ளது.

Wegweisung und Betretungsverbot

## வெளியேற்றுதல் மற்றும் உள்நுழையத்தடை

ஒரு வன்முறை செய்யும் நபரை பொலிசார் ஆகக் கூடியது 20 நாட்களுக்கு **வீட்டிலிருந்தும் அதை அண்மித்த பகுதிகளிலிருந்தும் வெளியேற்றலாம், அதேநேரத்தில் வீட்டுக்குள் நுழைவது மற்றும் அதை அண்மித்து பகுதிகளுக்கு வருவதைத் தடைசெய்யலாம்.** வெளியேற்றப்பட்ட நபர் வெளியேறுவதற்கு மற்றும் நுழைவதற்கு விதித்த தடைக்கு எதிராக கட்டாயநடவடிக்கை நீதிமன்றிற்கு மனுச்செய்யலாம்.

உங்களின் துணைவர் அல்லது துணைவி பொலிசாரால் வீட்டிலிருந்து வெளியேற்பட்டிருந்து அத்துடன்

– நீங்கள் தொடர்ந்தும் வெருட்டலுக்கும் சிரமத்திற்கும் உள்ளானால்
– அவர்/அவள் வீட்டிற்குத் திரும்பிவர முயற்சித்தால்

Polizeinotruf

## பொலிஸ் அவசர அழைப்பு ☎ 117

அவசரமான மருத்துவ உதவிக்கு

- **வைத்திய அவசர அழைப்பு, நோயாளர் வண்டி ☎ 144**
- **வைத்தியர் அவசர அழைப்பு ☎ 0900 11 14 14 (3.23 பிராங/நிமி.)**
- **குடும்பப் பெண் வைத்தியர், குடும்ப ஆண் வைத்தியர்**
- **லுசேர்ன் மாநில வைத்தியசாலை ☎ 041 205 11 11**

எந்த நேரத்திலும் தொடர்புகொள்ளலாம்

பாதுகாப்பு, தங்குமிடம் மற்றும் பெண்களுக்கான ஆலோசனை அவர்கள் தமது பிள்ளைகளோடு இருந்தாலும்

Frauenhaus Luzern

## பெண்கள் தங்கும் இல்லம் லுசேர்ன் ☎ 041 360 70 00

frauenhaus@frauenhaus-luzern.ch
www.frauenhaus-luzern.ch

எந்த நேரத்திலும் தொடர்புகொள்ளலாம்

நீங்கள் வன்முறையைச் சந்தித்தால் அல்லது அது குறித்து அறிந்தால் ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு

Opferberatungsstelle des Kantons Luzern

**பாதிப்புற்றவர்களுக்கான ஆலோசனை நிலையம்**

லுசேர்ன் மாநிலம்

**☎ 041 228 74 00 / opferberatung@lu.ch**

- இலவசமாக, நம்பிக்கையாக, தொலைபேசியில் அல்லது நேரடியாக உங்களுக்கான ஆலோசனை
- உங்களை மருத்துவப் பரிசோதனைக்கு, பொலிஸ் நிலையத்திற்கு, விசாரணைக்கு மற்றும் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லல்,
- உங்களுக்குத் தேவைப்படின் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பாதிப்புற்றவர்களுக்கான நிதிஉதவிகளை வழங்குவது

Obergrundstr. 70, 6003 Luzern, www.disg.lu.ch/opferberatung

ஆலோசனை மற்றும் தகவல்கள் வித்தியாசமான மொழிகளில்

# FABIA

# ☎ 041 360 07 22

வெளிநாட்டுப் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஆலோசனை மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றும் துறைசார் நிலையம் வித்தியாசமான மொழிகளில்

Tribschenstrasse 78
6005 Luzern
www.fabialuzern.ch
info@fabialuzern.ch

ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு

Sozialberatungsstellen

# சமூக ஆலோசனை நிலையங்கள்

உங்கள் பிரதேசத்தில். பொறுப்பு வகிக்கும் நிலையத்தை www.sobz.ch எனும் முகவரியில் காணலாம் அல்லது நீங்கள் வசிக்கும் நகரிலுள்ள நகர நிர்வாகத்தில் கேட்டறிந்து கொள்ளலாம்.

- வளர்ப்புமுறை குறித்த கேள்விகளுக்கு
- போதைக்கு அடிமையான பிரச்சினைகள்
- நிதிப் பிரச்சினைகள் போன்றவை

www.sobz.ch

எந்த நேரத்திலும் கலந்துரையாடுவதற்கு

Die Dargebotene Hand

# கைகொடுக்கும் கை

# ☎ 143

திண்டாடுவதிலும் பார்க்க அழையுங்கள்!

www.143.ch

எந்த நேரத்திலும் தொடர்புகொள்ளலாம்

வன்முறையைக் கைவிட விரும்பும் ஆண்களுக்கு

Gewalt-Hotline

## வன்முறை – நேரடித் தொடர்பு

**☎ 078 744 88 88 / 07 – 22 h**

agredis.ch, Unterlachenstrasse 12, 6005 Luzern
www.agredis.ch / gewaltberatung@agredis.ch
(டொச், அல்பானிஸ், போஸ்னிஸ், கொராட்டிஸ் மற்றும் சேர்பிஸ் மொழிகளில் ஆலோசனை)

வன்முறையைக் கைவிட விரும்பும் பெண்களுக்கு

Vollzugs- und Bewährungsdienste

**மறியல்- மற்றும் நன்நடத்தைச் சேவை**

**☎ 041 469 42 44 / vbd@lu.ch / www.vbd.lu.ch**

# எடுத்துச் செல்லும் பொருட்களின் பட்டியல்

நீங்கள் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முடிவுசெய்தால், இயலுமானவரை பின்வரும் பொருட்களை எடுத்துச் செல்லுங்கள்.

- தனிப்பட்ட பத்திரங்கள் (கடவுச்சீட்டு, அடையாள அட்டை, வதிவிட அனுமதி, குடும்பப் புத்தகம் போன்றவை)
- வங்கி அட்டை அல்லது/மற்றும் பணம்
- வீட்டுத் திறப்பு
- பாவிக்கும் மருந்துகள்
- தேவைப்படும் உடுப்புகள்
- பிள்ளைகளின் விருப்பமான விளையாட்டுப் பொருட்கள்
- பிள்ளைகளின் பாடசாலைப் பொருட்கள்

# வன்முறையை நிறுத்து!

பாதிக்கப்படுபவர்களுக்கான இந்த அவசர உதவி மடல் வித்தியாசமான மொழிகளில் கிடைக்கும். மேலதிக பிரதிகளை நீங்கள் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்:

KANTON LUZERN

Justiz- und Sicherheitsdepartement
**Koordination Gewaltprävention und Bedrohungsmanagement**
Bahnhofstrasse 15, 6002 Luzern | Telefon 041 228 59 29
gewaltpraevention@lu.ch | www.gewaltpraevention.lu.ch